1986 நவம்பர் 25] [திரு. க. இராசாராம்]

6. கரும்பு பயிரிடும் விவசாயிகளின் நலன்களை கருத்தில் கொண்டும் மற்றும் தமிழக சர்க்கரை ஆலைகள் நன்றாக செயல்பட வேண்டும் என்ற நோக்கத்துடனும் அரசு கரும்பு விலையை மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

(எ) திருப்பூர் பனியன் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவு நீரால் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு வி. தங்கவேலு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு ஒன்றினைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருப்பூரிலும் அதைச் சுற்றிலும் உள்ள நூல் மற்றும் துணி செய்முறைப்படுத்தும் தொழிற்சாலைகள் சிறிய தொழிற்சாலைகளாகவோ அல்லது மிகச்சிறிய தொழிற்சாலைகளாகவோ விளங்குகின்றன. செய்முறையில் வெளுப்புத் திரவம், எரிகாரம், ஹைட்ரோ-குளோரிக் அமிலம், கந்தக அமிலம், ட்ரை-சோடியம், ஃபாஸ்ஃபேட், ஹைட்ரஜன் பெராக்ஸைட், உப்பு பல்வேறு சாயங்கள் முதலியன மூலப்பொருளாகப் பயன்படுத்தப் படுகின்றன. நூல்/துணிகள் வெளுப்பேற்றி, மெருகூட்டி சாயமிடப்பட்டு செய்முறையில் வெளிப்படுத்தப்படும் கழிவுநீரானது கரையாத திடப்பொருள்களையும், மிதக்கும் திடப்பொருள்களையும், இரசாயன உயிரகத் தேவையும், உயிரக இரசாயன உயிரகத் தேவையும் இன்னும் பலவும் கலந்து இயல்பாகவே சாரத்தன்மை உள்ளது. திருப்பூரிலுள்ள அநேக தொழிற்சாலைகள் தமது தொழிற்சாலை கழிவுநீர் மற்றும் பிற கழிவு நீரை நிலத்திலும், நொய்யலாற்றை நோக்கி ஓடும் நீரோடைகளிலும் வெளியேற்றுகின்றன.

1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26 ஆவது பிரிவின்படி அனைத்துத் தொழிற்சாலைகளும் தொழிற்சாலைக் கழிவுநீர்/மற்றும் பிற நீரை வெளியிடுவதற்காக வாரியத்தின் அனுமதியைப் பெற வேண்டும்.

இதுவரை திருப்பூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள 72 தொழிற்சாலைகள் 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்படி வாரியத்தின் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளன. 41 தொழிற்சாலைகளுக்கு அனுமதி

அளிக்கப்பட்டு, வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைகளை திருப்தி செய்ய தேவையான கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் நிறுவுமாறு வற்புறுத்தப்பட்டுள்ளன. வாரியத்தின் அனுமதியைப் பெற்ற பிறகு 8 தொழிற்சாலைகள் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவியுள்ளனர். 11 தொழிற்சாலைகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை ஏற்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள தொழிற்சாலைகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை ஏற்படுத்தும் பணி உடனேயே மேற்கொள்ளுமாறு வலியுறுத்தப்பட்டு வருகின்றது. 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26-வது பிரிவின் கீழ் 31—5—1984-க்குள் அனுமதி கோரி விண்ணப்பிக்காததற்காக திருப்பூரிலுள்ள 7 தொழிற்சாலைகள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இப்பொருள் குறித்து கண்காணித்து வருகிறது.

(ஏ) கோவை நகரின் வடக்குப் பகுதியில் நில ஆர்ஜித நடவடிக்கையால் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மா. சின்னராசு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கையை வைக்கிறேன்.

அறிக்கை.

கோவை நகரம் தொழிற்சாலைகள் நிறைந்த நகரமாக உள்ளதால் வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட வேண்டியுள்ளதால், வீட்டு வசதி வாரியத்தின் மூலம் குறைந்த/நடுத்தர வருவாய் பிரிவினரின் வீட்டு வசதி தேவைகள் பூர்த்தி செய்யும் நோக்குடன், கோயம்புத்தூர் மாவட்டத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் அறிஞர் அண்ணா புறநகர்த் (வீட்டு வசதி) திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டுவதற்காக கீழ்க்கண்ட கிராமங்களில் உள்ள சுமார் 1,120.66 ஏக்கர் புஞ்சை நிலங்களை கையகப்